Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

♥ மண்ணில் அடங்கியுள்ள கூறுகள்

- ♦ திண்மக்கூறுகள் ⟶ மண்கனிப்பொருள் , மண் சேதனப்பொருள்
- ♦ மண்வளி
- ♦ மண்ணீர்
- ♦ மண் அங்கிகள்

| **திண்மக்கூறுகள்** | | |
|---|---|---|
| | * மண்கனிப்பொருள் | * மண் சேதனப்பொருள் |
| கூறுகள் | களி, அடையல், மணல் | உக்கிய, அழுகலடைந்த விலங்கு, தாவரப் பாகங்கள் |
| தொழில் | 1. தாவரத்திற்குத் தேவையான கனியுப்புக்கள் கிடைக்கும்.<br>2. இதிலுள்ள களித்துணிக்கைகள் மூலம் மண்ணீரும், கனியுப்புக்களும் தேக்கி வைக்கப்படும். | 1. தாவர வளர்ச்சிக்கான போசணைக்கூறுகளின் களஞ்சியசாலை<br>2. மண்வளி உள்ளடக்கத்தைக் கூட்டும்.<br>3. மண்நீர்த் தேக்கத்தை அதிகரிக்கும்.<br>4. கோடை காலத்தில் மண்வெடிப்படைவதைத் தவிர்க்கும். |

♦ மண் துணிக்கைகளுக்கிடையே காணப்படும் வளி **மண்வளி** ஆகும்.

♥ **செயற்பாடு 02 மண்ணில் வளி அடங்கியுள்ளமையை இனங்காணல்.**

A



மண்ணின் உயரம் 4cm

B



நீரின் உயரம் 4cm



(மண் + நீர்) உயரம் 7cm

அவதானம் -

- A, B யை ஒன்றாகக் கலக்கும் போது வளிக்குமிழிகள் வெளியேறும்.
- ஏற்பட்ட கனவளவுக் குறைவு 1cm. இதுவே மண்வளியின் கனவளவு.
- மண்ணின் கனவளவில் 1/4 பங்கு மண்வளி அடங்கியுள்ளது.

♦ தொழில் - 1. தாவரவேர், மண்அங்கிகளின் சுவாசத்திற்கான ஒட்சிசனை வழங்குதல்.
2. வித்து முளைத்தலிற்குப் பயன்படும்.
3. மண்அமைப்பை நெகிழ்வடையச் செய்யும்.

- **மண்ணீர்** - மண் துணிக்கைகளால் உறிஞ்சப்பட்டும், இடையிலுள்ள வெளியிலும் காணப்படும் நீர்.
- தொழில் - 1. மண்ணின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும்.
  2. தாவர ஒளித்தொகுப்பிற்கு
  3. மண் அங்கிகளும், தாவரங்களும் உயிர் வாழ உதவும்.
- மண்ணினுள் வாழும் நுண்ணங்கிகளும், மா அங்கிகளும் **மண் அங்கிகள்** எனப்படும்.

01. **செயற்பாடு 03 - மண்ணில் நீர் அடங்கியுள்ளமையை இனங்காணல்.**




- செய்முறை - 1. கொதிகுழாயினுள் சிறிதளவு மண்ணை எடுத்து வெப்பமேற்றுக.
  2. கொதிகுழாயினுள் சுவரோரமாக நீரற்ற செப்புசல்பேற்று இடுக.
- அவதானம் - ……………………………………………………………………...
- முடிவு - ……………………………………………………………………..

02. மண்ணில் வாழும் மா அங்கிகள் 2 தருக. (i)………………………..(ii)………………………

03. மண்ணில் வாழும் நுண்ணங்கிகள் 2 தருக. (i)………………………..(ii)………………………

04. மண்ணில் வாழும் நுண்ணங்கிகளின் தொழில்கள் 2 தருக.

(i)…………………………………………………………………………………...

(ii)………………………………………………………………………………….

05. மண்புழுவானது விவசாயிகளின் நண்பன் எனச் சொல்லப்படக் காரணம் யாது?

…………………………………………………………………………………………

06. **செயற்பாடு 04 - மண்ணில் நுண்ணங்கிகள் உண்டு என்பதை இனங்காணல்.**




- செய்முறை - படத்தில் காட்டப்பட்டதைப் போன்ற அமைப்பை தயார் செய்து ஒவ்வொரு மணித்தியாலமும் அவதானிக்குக.
- அவதானம் - பரிசோதனைக்குழாய் B உள்ள பால் A யை விட……………………………………………………
- முடிவு - ………………………………………………………